


- வாழ்வோம்

நீதி விசாரணையும் பழிவாங்கும் நடவடிக்கையும்!

‘திருச்செந்தூர் கோயில் அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் மரணம், கொலைதான்’ என்று சுட்டிக்காட்டிய ‘பால் கமிஷன்’ அறிக்கையை கலைஞர் செய்தியாளர்களிடம் வெளியிட்டு, அதனை ‘முரசொலி’ நாளிதழிலும் தொடராக வெளியிட்டார். அரசாங்கத்தின் மிக ரகசியமான ஆவணத்தை முறைகேடாகக் கைப்பற்றி வெளியிட்டதாக, அப்போதைய எம்.ஜி.ஆர். அரசு இந்த விவகாரத்தைத் திசைதிருப்பியது.

குற்றம் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முன்வராத அ.தி.மு.க. அரசு, அந்த அறிக்கையை கலைஞர் வெளியிட்ட காரணத்தினால், கலைஞர் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளிலே இறங்கியது. ஆவணத் திருட்டு மற்றும் அலுவல்முறை ரகசிய சட்டம் (OFFICIAL SECRETS ACT) ஆகிய வற்றின்கீழ், ‘முரசொலி’ செல்வம் மற்றும் கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன் ஆகியோரைக் கைதுசெய்ய, காவல் துறைக்கு ரகசிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

‘முரசொலி’ அலுவலகம், கலைஞரின் இல்லம், கலைஞரின் உதவியாளர் சண்முக நாதன் இல்லம் மற்றும் சதாசிவம் என்கிற அரசு அதிகாரி ஆகியோரின் இல்லங்களில் சோதனை என்கிற பெயரில் நெருக்கடிகள் அளிக்கப்பட்டன. முதல் குற்றவாளியாக சதாசிவமும் இரண்டாவது குற்றவாளியாக ‘முரசொலி’ செல்வமும், மூன்றாவது குற்றவாளியாக சண்முகநாதனும் நான்காவது குற்றவாளியாக கலைஞரும் சேர்க்கப்பட்டு, வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அரசு அதிகாரிகளான சதாசிவமும் சண்முகநாதனும் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இந்த வழக்கில், பணிநீக்கம் செய்யப்பட்ட கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன், 1989-இல் மீண்டும் தி.மு.கழக ஆட்சி வரும்வரை பணியில் சேர்க்கப்படவே இல்லை.

எந்த அளவுக்கு அரசின் பழிவாங்கும் நடவடிக்கை இருந்தது என்றால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில், கலைஞருக்கு அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு டைப் ரைட்டிங் மெஷின்களைக்கூட அரசு பறித்துக்கொண்டது. “பிடுங்கிக்கொண் டார்கள் என்று சொல்லமாட்டேன்; அவையின் செயலாளர் மூலமாகக் கேட்டுப் பெற்றுக்கொண்டார்கள்” என்று பின்னாளில், பால் கமிஷன் தொடர்பாகச் சட்டமன்றத்தில் நடந்த விவாதித்தின்போது குறிப்பிட்டிருப்பார் கலைஞர்.

‘முரசொலி’ செல்வம் அவர்களின் கைது இன்னும் கொடூரமானது. போலீஸ் பட்டா ளமே விமான நிலையத்தைச் சுற்றிவளைத்து, விமானத்தில் ஏறச் சென்றவரைக் கைது செய்தது.

“முரசொலி செல்வத்தை ஏதோ பயங்கர வாதியைப் போல, கட்டபொம்மனை அல்லது மருதுபாண்டியர்களைப் போல - அல்லது கம்யூனிஸ்ட் இயக்கத்தில் மிகப்பெரிய தலைவர்கள் அண்டர்கிர வுண்டிற்குச் செல்வார்களே, அவர்களைப் பிடிப்பதைப்போல - வீட்டிலே வந்து கைதுசெய்வதற்குப் பதிலாக, விமான நிலையத்திற்குச் சென்று, எங்கோ விமானத்தில் ஏறி வெளிநாட்டிற்கு ஓடிவிடுவாரோ என்று பயந்தோ என்னவோ - அதற்கென டிக்கெட்டை வாங்கியிருக்கிறாரா என்று தெரியாமல் - விமான நிலையத்தில் போலீஸ் உடுப்பு அணியாது, சாதாரண உடுப்பு அணிந்தவர்கள், திடீரென்று சுற்றிக்கொண்டு காரிலே ஏற்ற, பெண்மணிகள் - என்னுடைய வீட்டார் - யாரோ என்று தெரியாமல் தடுத்த நேரத்தில், அவர்களை அடித்து வீழ்த்தி, அவர்களுக்கும் காயங்களை உண்டாக்கினர்” என்று ‘நீதி கேட்டு நெடும்பயணம்’ வெளியீட்டில் அந்த நிகழ்வினைப் பதிவுசெய்துள்ளார் கலைஞர்.

கலைஞர் அளித்த தந்தி

1980-ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று, திருச்செந்தூரில் சுப்பிரமணியபிள்ளை அவர்களின் மரணத்துக்குப் பின், 02.12.1980 அன்று திருச்செந்தூரில் கடையடைப்புப் போராட்டம் நடைபெற்றது. அதன் பின்னர்தான் இந்த உண்மையை உலகம் அறியத் தொடங்கியது. அடுத்த நாளே, இந்த விவகாரத்தில் நீதி கேட்கும் போராட்டத்தைப் பாதிக்கப்பட்டோர் சார்பாக முன்னெடுத்தார் கலைஞர். 03.12.1980 அன்று பிரதமர், உள்துறை அமைச்சர், தமிழ்நாடு ஆளுநர் மற்றும் முதலமைச்சர் ஆகியோருக்குத் தந்தி அளித்து, இந்த விவகாரத்தில் நேர்மையான காவல் துறை அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரிக்கை வைத்தார்.

THE HON’BLE PRIME MINISTER,
ZAIL SINGH, HOME MINISTER,
GOVERNOR OF TAMIL NADU,
CHIEF MINISTER OF TAMIL NADU.

Subramania Pillai-Jewel Verification Officer-Cum-Assistant Commissioner of Hindu Religious and Charitable Endowment Department of Tirunelveli found dead under mysterious circumstances on 26 th November at Subramaniyaswamy Devasthanam, Inspection Bungalow, Tiruchendur. All political parties suspect murder. Trust Board Members absconding Harthal by public by 2nd December at Tiruchendur demanding proper investigation and enquiry. Please intervene Cause proper investiga-tion and enquiry by independent C.I.D. Branch.

M.KARUNANIDHI,
President, D.M.K.

எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையில், இந்த தந்தி அளித்த அடுத்த நாளே, டிசம்பர் 4-ஆம் தேதி, அ.தி.மு.க. கட்சி ஏடான அண்ணா பத்திரிகையில், ‘திருச்செந்தூரில் நடந்தது என்ன?’, ‘இறந்தவரை வைத்து கருணாநிதி நடத்தும் அரசியல் மோசடி’, ‘ஆர்.எம்.வி. கடும் கண்டனம்’ என தலைப்புச் செய்தி வெளியிடப்பட்டது. தவிர, அன்றே அறநிலையத் துறை அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் செய்தியாளர்களைச் சந்தித்து, சில விளக்கங்களை அளித்தார். அன்று அவர் அளித்த விளக்கத்தில், அறநிலையத் துறை அதிகாரி சுப்பிரமணிய பிள்ளைதான் உண்டியலைத் திருடினார் என்றும், அதன் காரணமாக ஓடி ஒளிந்தார் என்றும், அவரைத் துரத்திச்சென்று பணத்தைக் கைப்பற்றினார்கள் என்றும், அவமானம் தாங்க மாட்டாமல் அவர் தற்கொலை செய்துகொண்டார் என்றும் அதிகாரிகள் அளித்த அறிக்கையை வைத்துப் பேசினார். ஆனால், அந்தப் பொய் அறிக்கை மக்களிடம் எடுபடாத நிலையில், எதிர்க்கட்சிகளின் அழுத்தம் காரணமாக வேறுவழியின்றி, டிசம்பர் 19 அன்று நீதிபதி பால் கமிஷன் விசாரணை செய்யும் அரசாணை வெளி யிடப்பட்டது.

அந்த விசாரணையில்தான், அறங்காவலரும் நிர்வாகிகளும் நடத்திய உண்டியல் திருட்டுக்கு சுப்பிரமணிய பிள்ளை உடந்தையாக இல்லை. மாறாக மறுப்பு தெரிவிக்கிறார். அதனால் கொல்லப்படுகிறார் எனக் கண்டறியப்பட்டது. விசாரணை அறிக்கை அரசுக்குச் சாதகமாக இல்லாத நிலையில்.. நீதிபதி பால் அவர்கள், தனது அறிக்கையிலே குறிப்பிட்ட குற்றவாளிகள்மீது அரசாங்கத்தால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்ட நிலையில்தான், அந்த அறிக்கை கலைஞருக்குக் கிடைத்து, அதை பொதுவெளிக்குக் கொண்டுவந்தார். அதற்காகப் பழிவாங்கும் நடவடிக்கை தொடங்கியது.

...தொடரும்

● தமிழ்.கா.அமுதரசன் ●


ஓவியம் : ரவி பேலட்



81
கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

கழகத் தலைவருக்குப் பாராட்டு விழா!



கோவையின் தனிப்பெரும் அடையாளமாக உருவாகியுள்ள இந்த `பெரியார் அறிவுலகம்', நவம்பர் 6, 2024 -இல், அன்றைய முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, திராவிட மாடல் ஆட்சிக்காலத்திலேயே கட்டி முடிக்கப்பட்டது. `பகுத்தறிவுப் பேராசான்' தந்தை பெரியாரின் பெயரில், இந்த மாபெரும் அறிவுலகத்தை அமைத்துத் தந்த கழகத் தலைவர் அவர்களுக்கு, அதே கோவையில் இன்று பாராட்டு விழா நடத்துகிறது, திராவிடர் கழகம். வ.உ.சி. மைதானத்தில் மாலை 5 மணிக்கு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்தப் பாராட்டு விழாவில், கழகத் தலைவர் அவர்கள் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

அனைவரும் வாரீர்...

திறப்பு விழா கண்டிருக்கிறது. சுமார் 7 ஏக்கர் நிலப்பரப்பில், 1.98 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் 7 தளங்களுடன், சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிகப் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டுள்ளது, இந்த அறிவுலகம். `1.25 இலட்சத்துக்கும் மேற்பட்ட நூல்கள் கொண்ட நூலகம்' மற்றும் `டிஜிட்டல் நூலகத்தில் குழந்தைகள் நூலகம்', `அறிவியல் மையம்', `கோளரங்கம்', `டி.என்.பி.எஸ்.சி.', `யூ.பி.எஸ்.சி.' போன்ற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கான படிப்பறைகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள் நடத்த, நவீன அரங்கங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

ஃப்ளாஷ்பேக்





ஏ.வீ.இராமநாதன்

அன்பகத்தில் தலைவர் அணிவித்த சால்வை!

2014-ஆம் ஆண்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், கழக நிகழ்ச்சிகளுக்காக திருவாரூர் சென்றிருந்தார். அப்போது, தலைவருடன் பயணம் செய்துகொண்டிருந்த திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் அவர்களை, காவல் துறையினர் ஒரு வழக்கிற்காகக் கைதுசெய்ய முயன்றபோது, அதைக் கண்டித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர் அவர்களும் கைதுசெய்யப்பட்டார். இதையடுத்து, தலைவரை விடுவிக்கவேண்டி தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் மறியல் போராட்டம் நடத்திக் கைதாகினர். சென்னையில் கைதுசெய்யப்பட்ட உடன்பிறப்புகளுக்கு, தலைவர் அவர்கள் சால்வை அணிவித்து ஊக்கப்படுத்திய நிகழ்ச்சி அன்பகத்தில் நடைபெற்றது. நான் பெருமைப்பட்ட தருணத்தை இந்தப் படத்தில் பார்க்கிறேன்.

– ஏ.வீ.இராமநாதன், மாவட்டப் பிரதிநிதி, சென்னை மேற்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1949

முதல் பொதுக்கூட்டச் செலவு!

-ஆம் ஆண்டு செப்டம்பர் 18-ஆம் தேதி, சென்னை ராபின்சன் பூங்காவில் நடைபெற்ற கழகத்தின் முதல் பொதுக்கூட்டத்துக்கு ஆன செலவு 1,451 ரூபாய். அண்ணா - ரூ.1,000, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி - ரூ.100, கே.கே.நீலமேகம் - ரூ.100, ப.உ.சண்முகம் - ரூ.100, எஸ்.நீதிமாணிக்கம் - ரூ.100, ஆவுடையப்பன் - ரூ.100 என வழங்கினர். அண்ணா அவர்கள் பேசத் தொடங்கியபோது, கடும் மழை. மழையில் நனைந்துகொண்டே மக்கள் அண்ணாவின் உரையைக் கேட்டனர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900